# இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர்

**Latest Notes Tnpsc Group 2&4 Vao = Exams GK Material**

## இந்தியக் குடியரசுத் துணைக் தலைவர்களின் பட்டியல்

| எண். | குடியரசுத் துணைத் தலைவர் | பதவி ஆரம்பம் | பதவி முடிவு | படம் |
|---|---|---|---|---|
| 1 | சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் | 13 மே 1952 | 12 மே 1962 |  |
| 2 | ஜாகிர் உசேன் | 13 மே 1962 | 12 மே 1967 |  |
| 3 | வரதாகிரி வெங்கட்ட கிரி | 13 மே 1967 | 3 மே 1969 |  |
| 4 | கோபால் சுவரூப் பதக் | 31 ஆகஸ்டு 1969 | 30 ஆகஸ்டு 1974 | - |
| 5 | பசப்பா தனப்பா ஜாட்டி | 31 ஆகஸ்டு 1974 | 30 ஆகஸ்டு 1979 |  |
| 6 | முகம்மது இதயத் உல்லா | 31 ஆகஸ்டு 1979 | 30 ஆகஸ்டு 1984 |  |
| 7 | இராமசாமி வெங்கட்ராமன் | 31 ஆகஸ்டு 1984 | 27 ஜூலை 1987 |  |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | சங்கர் தயாள் சர்மா | 3 செப்டம்பர் 1987 | 24 ஜூலை 1992 |  |
| 9 | கோச்செரில் ராமன் நாராயணன் | 21 ஆகஸ்டு 1992 | 24 ஜூலை 1997 |  |
| 10 | கிருஷ்ண காந்த் | 21 ஆகஸ்டு 1997 | 27 ஜூலை 2002 | - |
| 11 | பைரோன் சிங் செகாவத் | 19 ஆகஸ்டு 2002 | 21 ஜூலை 2007 |  |
| 12 | முகம்மது அமீத் அன்சாரி | 11 ஆகஸ்டு 2007 | 10 ஆகஸ்டு 2012 |  |
| 13 | முகம்மது அமீத் அன்சாரி | 11 ஆகஸ்டு 2012 | தற்பொழுது கடமையாற்றுபவர் |  |

- இந்தியாவின் இரண்டாவது மிக உயர் பதவிக்குரியதாகும்,
- குடியரசுத் தலைவருக்கு அடுத்த நிலையில் வரும் பதவியாகும்.
- துணைக்குடியரசுத்தலைவரே நாடாளுமன்றத்தின் மாநிலங்களவைத் தலைவராவார்.
- எனினும் இவருக்கு மாநிலங்களவை ஓட்டெடுப்பில் ஓட்டளிக்கும் உரிமை இல்லை. ஏனெனில் இவர் மாநிலங்களவை உறுப்பினர் அல்லர். எனினும் ஓட்டுக்கள் சமநிலையில் இருக்கும் போது இவர் ஓட்டளிக்கலாம்.
- தற்பொழுதய துணைக்குடியரசுத் தலைவர் மேதகு முகம்மது அமீத் அன்சாரி , இவர் ஆகஸ்டு 11, 2007 ஆண்டு இப்பதவிக்குத்

தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்ந்து இரண்டாம் முறையாக ஆகத்து 7, 2012 இல் மீண்டும் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

- இந்திய அரசியலமைப்புச் சட்டவிதி = 63 ல் குறிப்பிட்டுள்ளபடி துணைக் குடியரசுத் தலைவர் நியமனம் செய்யப்படுகின்றார்.
- குடியரசுத் தலைவருக்கு கோரப்படும் அனைத்துத் தகுதிகளும் இவருக்கும் கோரப்படும்.
- இந்தியக் குடிமகனாக இருத்தல் அவசியம்.
- குடியரசுத் தலைவர் எதிர்பாராத இறப்பின் நிமித்தம் அல்லது அவர் பதவிக்காலம் முடிவுற்ற நிலை அல்லது அவர் பணியிலிருந்து நீங்குதல் போன்ற காலங்களில் துணைக்குடியரசுத் தலைவரே குடியரசுத் தலைவர் பதவியில் மீண்டும் புதியக் குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கும் வரையில் பதவி வகிப்பார்.

---

A.MURUGANANTHAM.,M.Sc.,M.Ed.,

tnpsctamilnadu.weebly.com